


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2023) சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 50,202 பயனாளிகளுக்கு ரூ.170.31 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சேலம் மாநகராட்சி மேயர் ஆர்.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் பொன்.கௌதம் சிகாமணி, எஸ்.ஆர்.பார்த்திபன், ஏ.கே.பி.சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிர்வாக இயக்குநர் பா.பொன்னையா, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் மாநகராட்சி ஆணையர் எஸ்.பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2023) சேலம் மாவட்டம், மேட்டூர் செல்லும் வழியில் நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம் கோனூர் ஊராட்சியில் உள்ள பெரியார் நினைவு சமத்துவபுரக் குடியிருப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு வசிப்பவர்களிடம், வசதிகள் குறித்து கேட்டறிந்தார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம் ஆகியோர் உள்ளனர்.



சேலம், அஸ்தம்பட்டி ஆய்வு மாளிகையில், நேற்று முன்தினம் (11.06.2023) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அய்யம் பெருமாள்பட்டியைச் சேர்ந்த திருமதி கண்ணம்மாள் என்பவரின் நீண்ட நாள் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

### கோனூர் ஊராட்சியில் உள்ள

# தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

சேலம், ஜீன்.13-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2023) சேலம் மாவட்டம், மேட்டூர் செல்லும் வழியில், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சியில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவ புரத்திற்கு நேரில் சென்று பார்வை யிட்டு ஆய்வு செய்து, அங்கு வகிக் கும் மக்களிடம் வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

சேலம் மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள் மற்றும் இன்று மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்து விடும் நிகழ்வு ஆகிய நிகழ்ச் சிகளில் கலந்து கொள்வதற்காக 10.6.2023 அன்று மாலை சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்த முதல மைச்சர் அவர்கள், நேற்று முன்தினம் காலை (11.6.2023) சேலம் மாநக ரில் உள்ள பேரறிஞர் அண்ணா பூங்காவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்க ளின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்து, சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத் தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங் கினார்.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை சேலம் மாவட் டம், மேட்டூர் செல்லும் வழியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்க ளால் 1998 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சியில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அச்சமத்துவபுரத்தை சீரமைத்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்பேரில் 2021 2022ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.47 இலட்சம் செல வில் 94 வீடுகளுக்கு வெள்ளை அடித்தல் மற்றும் சிறு பழுது நீக்கப் பணிகளும், ரூ.44.20 இலட்சம் செலவில் சாலை வசதி, குடிநீர் வசதி, விளையாட்டு மைதானம், சமுதா யக்கூடம், அங்கன்வாடி மையம், நியாய விலைக்கடை, சமத்துவபுர வளைவு ஆகிய இதர பொது கட்ட மைப்புகளுக்கான பழுது நீக்கப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் சமத்துவபுரத்தை பார் வையிட்டு ஆய்வு செய்தபோது, சமத்துவபுரத்தில் வசிக்கும் மக்களி டம் அங்குள்ள சாலை வசதி, குடிநீர் வசதி போன்ற வசதிகள் குறித்து கேட் டறிந்தார். அப்போது, அம்மக்கள் அனைத்து வசதிகளும் சிறப்பாக உள்ளதாகவும், சமத்துவபுரத்தை சீரமைத்திட நடவடிக்கை எடுத்த மைக்காக தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை முதலமைச்சர் அவர் களுக்கு தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற் றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# வாளுக்கு வேலி அம்பலம் திருவுருவச் சிலை அமைக்கப்படும்!

## சிவகங்கையில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேட்டி!



சிவகங்கை, ஜுன் 13-

சிவகங்கை மாவட்டம் பாகனேரி அருகே உள்ள கத்தப்பட்டில் சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலத்தின் பிறந்த நாள் நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி துறைஅமைச்சர் ஐ.பெரியசாமி தலைமை யில் அமைச்சர்கள் கே. ஆர். பெரியகருப்பன், பி.மூர்த்தி, ஆகியோர் வாளுக்கு வேலி அம்பலம் சிலைக்கு முதல் வர் தளபதி அவர்கள் உத்த ரவின் பேரில் மலர் மாலை வைத்து மரியாதை செலுத் தினார்கள்.

பின்னர் அமைச்சர் ஐ. பெரியசாமி செய்தியாளர் களிடம் கூறியதாவது.

தமிழகத்தில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து தமிழர்களின் வர லாற்றினை முதல்வர் உலக றிய தெரிய வைப்பதில் தீவிர முயற்சி எடுத்து வரு கிறார். வீரமங்கை வேலு நாச்சியார், மாமன்னர் மருது பாண்டியர்கள் ஆகியோரது வழியில் வாளுக்கு வேலி அம்பலமும் வெள்ளையர் களை தீவிரமாக எதிர்த்து போராடியவர் ஆவார். இவ ரது வரலாற்றினை மக்கள் தெரிந்து கொள்ளும் வகை யில் முதல்வர் அவர்கள் அவ ருக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்றும் அவரது பிறந்தநாளை அரசு விழாவாக கொண்டாடப் படும் என்று அறிவித்தார்.

முதல்வர் உத்தரவின் பேரில் எனது தலைமையில் அமைச்சர்கள், அரசு அதிகா ரிகள், உள்ளாட்சி பிரதி நிதி கள் கலந்து கொண்டு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினோம்.

வாளுக்கு வேலி அம்ப லம் குறித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தென் பாண்டிச் சிங்கம் என்ற நூலில் அவரது வரலாற் றினை தெளிவாக எழுதியுள் ளார். எத்தனையோ குறு நில மன்னர்கள் இருந்தாலும் இத்தகையவர்கள் வெள் ளையர்களை நாட்டை விட்டு விரட்டுவதில் முதலி டம் பெற்றவர்கள் ஆவார் கள்.

இத்தகைய வரலாற்று நாயகர்கள் வெள்ளையர் களை நாட்டை விட்டு வெளியேற்றுவதில் தனது உயிரையும் பொருட்படுத் தாமல் தீவிரமாக எதிர்த்து போராடி வந்தார்கள். இத் தகைய மாபெரும் சுதந்தி ரப் போராட்ட வீரர்களின் வரலாற்றினை இளைஞர் கள் எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்ள வேண் டும் என்ற வகையில் அரசு விழாவாக நடத்துமாறு முதல்வர் அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

வரலாற்றினை யாரும் மறைக்க முடியாது. யாருக் கும் வரலாற்றை மறைக்க உரிமை கிடையாது. தமிழ கத்தில் உள்ள அனைத்து சுதந்திர போராட்ட வீரர் களின் வரலாறுகளை உல கிற்கு தெரிவிப்பதில் இந்தி யாவிலேயே தலைசிறந்த முதல்வராக நமது முதல்வர் தளபதி அவர்கள் திகழ்ந்து வருகிறார்கள். வாளுக்கு வேலி அம்பலத்தின் வர லாற்றினை சிறுகதை மன் னர் எஸ். எஸ். தென்னரசு அவர்கள் மூலமாக தலைவர் கலைஞர் அவர்கள் தென் பாண்டி சிங்கம் என்ற நூலில் சிறப்பாக எடுத்து எழுதியுள்ளார்.

அவருக்கு இங்கு திருஉரு வச் சிலை அமைக்க வேண் டும் என்று கோரிக்கை வைத்தார்கள். ஏற்கனவே முதல்வர் அவர்கள் மணி மண்டபம் கட்டப்படும் என்று அறிவித்து அதற்கான இடமும் தேர்வு செய்யப் பட்டு வருகிறது. வாளுக்கு வேலி அம்பலம் திருஉரு வச்சிலை அமைக்க வேண் டும் என்று இங்கு என்னி டம் கோரிக்கை வைத்ததை முதல்வரின் கவனத்திற்கு தெரிவிப்பேன். இதுகுறித்து முதல்வர் அவர்கள் முடிவெ டுப்பார். மணிமண்டபத் தினை முதல்வர் அவர்கள் திறந்து வைப்பார்கள். அதற் கான ஏற்பாடுகள் நடை பெறும்.

இவ்வாறு அமைச்சர் பெரியசாமி செய்தியாளர் களிடம் கூறினார்.

பேட்டியின் போது அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன், பி.மூர்த்தி, திருமதி தமிழரசி ரவிக்கு மார் எம்.எல்.ஏ., த.சேங்கை மாறன், கே.எஸ்.எம்.மணி முத்து ஆகியோர் இருந்தார் கள்.

# தமிழ்நாட்டில் வெப்பநிலை அதிகரிக்கும்!

சென்னை, ஜுன் 13-

தமிழ்நாட்டில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ள தாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறியி ருப்பதாவது: மேற்கு திசை காற்று மற்றும் வெப்ப சல னம் காரணமாக இன்று (13.06.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக் கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னது டன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

(14.06.2023 முதல் 16.06.2023 வரை) தமிழ் நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசா னது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிக ளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓர ளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு இடங்களில் இடி மின்னலு டன் கூடிய லேசானது / மிதமான மழை பெய்யக் கூடும். அதிகபட்ச வெப்ப நிலை 40-41 டிகிரி செல்சி யஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 29 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கும்.


அதிகபட்ச வெப்ப நிலை: (12.06.2023 முதல் 13.06.2023 வரை) தமிழ கம் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் அதிக பட்ச வெப்பநிலை 39 டிகிரி முதல் 41 டிகிரி செல் சியஸ் அளவில் இருக்கக் கூடும்; ஓரிரு இடங்களில் இயல்பிலிருந்து 2 4 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும். அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது வெப்ப அழுத்தம் காரணமாக அசௌகரியம் ஏற்படலாம்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தஞ்சை ந. பூபதி

**ஜுன் 13 (2006)**



தஞ்சை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர்.

தஞ்சை நகரக் கழகப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், நகர்மன்றத் துணைத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

தலைவர் கலைஞர் இடும் கட்டளை எதுவானாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடியவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மக்கள் நலனை மட்டுமே முன்னிறுத்தி – ஈராண்டில்

# தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்களில் முத்திரை பதிக்கும் அரசு!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!


தினகரன்
போற்றப்படும் ஈராண்டு

சென்னை, ஜுன் 13 -

‘மக்கள் நலனை மட் டுமே முன்னிறுத்தி - ஈராண் டில் தமிழ்நாட்டின் வளர்ச் சிக்கான திட்டங்களில் முத்திரை பதிக்கும் வகை யில் சாதனை படைத்துள் ளது திராவிட மாடல் அரசு” என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து 12.6.2023 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப் பட்டுள்ளதாவது:-

நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி கலை ஞர் என்றால், அவரது அடி யொற்றி இன்று தமிழ் நாட்டை முதன்மை மாநில மாக மாற்றிய பெருமை முதல்வர் மு.க.ஸ்டாலி னையே சாரும். தமிழ்நாட் டின் முதல்வராக மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்ற நாளில் இருந்தே மாநிலத் தின் வளர்ச்சிப் பாதை தொடங்கி விட்டது. அவர் பதவியேற்ற சமயத்தில் அர சின் வருவாய் பற்றாக்குறை 3.28 சதவீதமாக இருந்தது. நிதி பற்றாக்குறை 4.61 சதவீ தமாகவும் இருந்த நிலை யில், மாநிலத்தின் பொரு ளாதாரம் சீரற்ற நிலையில் இருந்தது. ஈராண்டில் முதல் வர், அரசின் தேவையற்ற செலவீனங்களை குறைத்த தோடு, வருவாயை பெருக் கவும் நடவடிக்கை மேற் கொண்டார். இன்று மாநி லத்தின் பொருளாதாரம் சீரான வளர்ச்சியில் உள்ளது.

ஒன்றிய அரசு ஜி.எஸ்.டி. என்ற பெயரில் போதிய நிதியை தமிழ்நாட்டிற்கு தராத நிலையிலும், புதிய திட்டங்களை அறிவித்து முதல்வர் அவற்றை செயல் படுத்தியும் காட்டியுள்ளார். கடந்த இரு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் கட்டமைப்பு வளர்ச்சிக்கு என்னென்ன திட்டங்கள் தேவையோ, அவற்றையெல்லாம் தொகுத்து அரசு இயந்திரம் மூலம் செயல்படுத்தியுள் ளார். பெண்களுக்கு பேருந் தில் இலவச பயணம், மக் களை தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, நான் முதல்வன் திட்டம், இன்னு யிர் காப்போம், அரசு முன் மாதிரி பள்ளிகள், அரசு பள்ளி குழந்தைகளுக்கு இல வச காலை சிற்றுண்டி, உயர் கல்வி பயிலும் மாணவி களுக்கு மாதம் 1000 என மக்கள் நலன் சார்ந்த திட் டங்கள் நம் மாநிலத்தில் மட்டுமே இன்று செயல்ப டுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஈராண்டில் லட்சக்க ணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப் பட்டுள்ளதோடு, முதலீடு களை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதல் மாநிலமாக உள்ளது.

தான் இந்தியாவின் ‘நம் பர் 1 முதல்வர்’ என கூறப்ப டுவதை விட, தமிழ்நாடு நம்பர் 1 மாநிலம் என கூறப் படுவதையே முதல்வர் பெருமையாக நினைக்கிறார். எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் மாநிலத்தின் அனைத்து பகுதிகளுக்கும், அனைத்து மக்களுக்கும் திட் டங்கள் சென்றடைய இந்த திராவிட மாடல் அரசு ஈராண்டில் பாடுபட்டது. மக்கள் நல்வாழ்வு, சமூக நீதி, வறுமை ஒழிப்பு, தொழில்வளர்ச்சி என பல் வேறு காரணிகளை மைய மாக கொண்டு தமிழ்நாட் டின் வளர்ச்சி இப்போது வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் செயல்படுத் தப்படும் சில திட்டங்கள் இந்தியாவின் மற்ற மாநிலங் களுக்கு முன்னுதாரணமாக உள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் 10 ஆண்டுகளாக தமிழகத்தின் வளர்ச்சி முடங்கி கிடந்த நிலையில், பொறுப்பேற்ற ஈராண்டில் நிதி பற்றாக்கு றையை காரணம் காட்டி புதிய திட்டங்களை புறக்க ணிக்காமல் மக்கள் நலனை மட்டுமே முன்னிறுத்தி பல் வேறு சவால்களுக்கிடையே அவற்றை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு அரசு சாதனை படைத்து வருகிறது. தமிழ் நாடு முதல்வரே சேலத்தில் தெரிவித்துள்ளது போல் இரண்டு ஆண்டு தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுகளுக் கான திட்டங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன. மாறு பட்ட கொள்கைகள் இருப்பினும் இந்தியாவின் பிரதமர் மோடி கூட சமீபத் தில் இந்தியாவின் வளர்ச்சி யில் தமிழ்நாடு இன்ஜினாக உள்ளது என மனம் திறந்து பாராட்டியுள்ளார். வளர்ச் சிக்கான திட்டங்களையும், முற்போக்கு எண்ணங் களோடும் இந்த திராவிட மாடல் அரசு களம் இறங்கி, இன்று முத்திரை பதித்து வருகிறது. இந்த ஈராண்டு சாதனைக்காக முதல்வர் மட்டுமின்றி, அமைச்சர்கள், அதிகாரிகள், அரசு அலுவ லர்கள், மக்கள் பிரதிநிதிகள் என அனைத்துத் தரப்பை யுமே பாராட்டுவோம்.

இவ்வாறு தலையங்கத் தில் கூறப்பட்டுள்ளது.



இராமநாதபுரம் மாவட்டம், தொண்டி சிறப்பு நிலை பேரூராட்சி பேருந்து நிலையத்தில் 4.25 லட்சம் மதிப்பிட்டில் அமைக்கப்பட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா நினைவு வளைவு திறப்பு விழா பேரூராட்சி தலைவர் ஷாஜகான்பானு, ஜவஹர் அலிக்கன் தலைமையில் நடைபெற்றது. இதில்,சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., கலந்துகொண்டு திறந்து வைத்தார்.அதனைத் தொடர்ந்து அங்கு பணி புரியும் பேரூராட்சி தூய்மை பணியாளர்கள் 50 க்கும் மேற்பட்டவர்களுக்கு புத்தாடை வழங்கினர். இநத நிகழ்ச்சியில், கரு மாணிக்கம், இஸ்மத் நானா, ஆர்.கே.கார்மேகம், முகமது முக்தார், பிரவீன் தங்கம், ஜீவரத்தினம், எஸ். ரவி, சரவணன், என்.பகவத்சிங், முத்து மனோகரன், காளிதாஸ், சண்முகம் மற்றும் மாநில மாவட்ட நகர ஒன்றிய பேரூரர் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.